செ.வெ.எண் : 50/ மார்ச் நாள் : 23.03.2021

## இராமநாதபுரம் மாவட்டம்

### மாற்றுத்திறனாளிகள் பங்கேற்ற வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி

### மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் றடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (23.03.2021) மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், (பரமக்குடி, திருவாடானை) திரு.சவுரப் துபே,இ.வ.ப., (Thiru.Saurabh Dubey,I.R.S.,) அவர்கள் முன்னிலையில், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது.

சட்டமன்ற பொதுத்தேர்தல்-2021 முன்னிட்டு இராமநாதபுரம் மாவட்டத்தில் 100 சதவீத வாக்குப்பதிவினை வலியுறுத்தும் விதமாக மாவட்ட நிர்வாகத்தின் மூலம் பல்வேறு வாக்காளர் விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. குறிப்பாக, "கொரோனா பாதுகாப்பு முன்னெச்சரிக்கையுடன் தேர்தல் நடவடிக்கைகளில் பங்கேற்றல், முதன்முறை வாக்காளர்கள், மூத்த குடிமக்கள், மாற்றுத்திறனாளிகள் உட்பட அனைத்து தரப்பு வாக்காளர்களையும் தேர்தல் நடவடிக்கைகளில் ஊக்குவித்தல், 100 சதவித வாக்குப்பதிவு, நேர்மையாக வாக்களித்தல்" உள்ளிட்ட நோக்கங்களை வலியுறுத்தி வாக்காளர் விழிப்புணர்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

அதன்படி, இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக வாக்காளர் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் 25 க்கும் மேற்பட்ட பல்வேறு மாற்றுத்திறன் கொண்ட நபர்கள் ஆர்வமுடன் பங்கேற்று, மாவட்ட தேர்தல் அலுவலர்/ மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.தினேஷ் பொன்ராஜ் ஆலிவர்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் வாக்காளர் விழிப்புணர்வு உறுதிமொழி எடுத்துக் கொண்டனர். மேலும், "100 சதவிதம் வாக்களிப்போம்" என்ற நோக்கத்தை வலியுறுத்தி நடைபெற்ற வர்ககாளர் விழிப்புணர்வு கையெழுத்து இயக்கத்தில் ஆர்வமுடன் பங்கேற்று கையெழுத்திட்டனர். தொடர்ந்து, மின்னணு வாக்குப்பதிவு இயந்திரத்தில் வாக்களிக்கும் நடைமுறை குறித்து மாற்றுத்திறனாளிகள் எளிதில் புரிந்து கொள்ளும் வகையில் செயல்முறை விளக்கம் அளிக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் இராமநாதபுரம் சார் ஆட்சியர் டாக்டர்.என்ஓ.சுகபுத்ரா,இ.ஆ.ப., மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.அ.சிவகாமி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.கு.ஜோதிலிங்கம் உட்பட உட்பட அரசு அலுவலர்கள் மாற்றுத்திறனாளிகள் பங்கேற்றனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**